2017/1-2

செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவை
முதலாவது கலந்துரையாடல் வரைவு - மூலப்பிரதி ஆங்கிலத்திலுள்ளது

# செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவைச் சட்டம்

செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவை

முதலாவது கலந்துரையாடல் வரைவு - மூலப்பிரதி ஆங்கிலத்திலுள்ளது

# செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவைச் சட்டம்

செய்தி ஊடகச் சுதந்திரத்தைப் பேணிக்காக்கும் மற்றும் இலங்கையில் செய்தி ஊடகங்களின் உயர்தொழில்சார் நியமங்களைப் பேணும் அத்துடன் முன்னேற்றும் குறிக்கோளுடன் செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவையொன்றைத் தாபிப்பதற்கானதொரு சட்டம்.

**முன்னுரை**

அரசியலமைப்பும், இலங்கையினால் ஏற்புறுதிசெய்யப்பட்ட குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள்பற்றிய சர்வதேசப் பொருத்தனையும், பேச்சு அத்துடன் ஊடகச் சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிக்கின்றனவாதலாலும்;

உயர் ஒழுக்கவியல்சார் நியமங்களையும் உயர்தொழில்சார் தகுதியையும் கொண்டதும், பிரசைகளுக்குப் பரந்தளவிலான தகவல்களையும் கருத்துக்களையும் வழங்குவதற்கும் தங்குதடையற்ற சனநாயகக் கலந்துரையாடலுக்கான பகிரங்க அரங்காகச் சேவையாற்றுவதற்கும் தன்னை அர்ப்பணித்துள்ளதுமான சுதந்திரமான, சுயாதீனமான மற்றும் பல்வகைப்பட்ட ஊடகம், இலங்கையில் சனநாயகத்தைக் கட்டியெழுப்புவதிலும் பேணுவதிலும் இன்றியமையாதது என அறிந்தும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

1. இச்சட்டம் …….. ஆம் ஆண்டின் ……. ஆம் இலக்க, செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படியான சான்றுப்படுத்துகைத் திகதியை உடனடுத்துப் பின்வரும் நாளன்று வலுவுக்கு வருதலும் வேண்டும்.

**இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தை இல்லாதொழித்தல்.**

2. 1979 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

**சட்ட ஏற்பாடுகளினது ஏற்புடைமை**

3. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பின்வருவனவற்றைக் கொண்டுள்ள செய்தி ஊடகப் பரப்புகை மூலங்களுக்கு இச்சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்:

    3.1 இலங்கையிலிருந்து வெளியிடப்படுபவையும் அவற்றின் தொடரிணை (online) பதிப்புகளுமான செய்தி ஊடக வெளியீடுகள்;

    3.2 ஒலி-ஒளிபரப்பு உரிமத்துடன் இணைந்துள்ள நிபந்தனைகளுக்கமைய, இலங்கையிலிருந்து ஒலி-ஒளிபரப்பப்பட்டவையும் அல்லது விநியோகிக்கப்பட்டவையும் அவற்றின் தொடரிணைப் பதிப்புக்களுமான சகல ஒலி-ஒளிபரப்பு உள்ளீட்டுச் சேவைகளும்;

3.3 இலங்கையிலிருந்து தொடங்கப்படுகின்றவையும் சுயாதீன ஊடக தரநிர்ணயங்கள் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட எவையேனும் இயைபான ஒழுக்கநெறிக் கோவைகளுக்கு (Codes of Practices) இணங்கியொழுகுவதற்குத் தமது தன்னார்வமான உடன்பாட்டை எழுத்தில் விதிமுறையாக வெளிப்படுத்தியுள்ளவையும் இவ்வுடன்பாடு அவற்றின் முகப்புப்பக்கத்தில் பொருத்தமானமுறையிலும் துலாம்பரமானவகையிலும் வெளிக்காட்டி வைக்கப்பட்டதுமான தொடரிணைச் செய்தி ஊடகச் சேவைகள்.

## ஊடகச் சுதந்திரமும் செய்தி ஊடகமும்

4. ஊடகச் சுதந்திரம் :

அ. அரசியலமைப்புரீதியில் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான உரிமையை ஒத்திருக்கின்றது;

ஆ. செய்தி ஊடகப் பரப்புகை மூலங்களின் ஏதேனும் முற்தணிக்கையைத் தடுக்கின்றது.

5. செய்தி ஊடகப் பரப்புகை மூலங்கள் அவற்றின் பகிரங்கப் பணிகளை நிறைவேற்றுகையில், பின்வருவனவற்றுக்கான உரிமையைக் கொண்டிருக்கின்றன:

5.1 செய்திகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்கும் பரப்புவதற்கும்;

5.2 பல்வேறு பிரச்சினைகளும் பகிரங்க விடயங்களும் பற்றி அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கும் பகுத்தறிந்து அறிக்கையிடுதலில் ஈடுபடுவதற்கும்; அத்துடன்

5.3 பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் நடைமுறையில் பங்குபற்றுவதற்கும்.

## வெளியிடுவதற்கான உரிமை

6. இச்சட்டத்தில் தரப்பட்டுள்ள விதிகளுக்கும், ஓர் ஒலி-ஒளிபரப்புச் சேவையைத் தொழிற்படுத்துவதற்கு முன்னர் ஒலி-ஒளிபரப்பு உரிமமொன்றைப் பெறுவதற்கான தேவை தொடர்பான விதிகளுக்கும் மட்டுமே அமைய, ஒரு செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தைத் தாபிப்பதற்கான உரிமையை சகலரும் கொண்டிருக்கின்றனர்.

7. ஒரு செய்தி ஊடகப் பரப்புகை மூலத்துக்காகப் பணிபுரியும் ஊடகவியலாளரினால் செய்திகளும் தகவல்களும் சட்டமுறையாகச் சேகரிக்கப்படுவதற்கு ஆளெவரும் வேண்டுமென்று தடையிடுதலாகாது.

8. (1) ஆளெவரும், தவறான செயல் பற்றிய தகவலை, அல்லது ஆரோக்கியம், பாதுகாப்பு அல்லது சூழலுக்குப் பாரிய அச்சுறுத்தலை வெளிக்காட்டும் தகவலை வெளிவிடுவதற்காக, அவர்கள் நல்லெண்ணத்துடனும், அத்தகவல் பொருளளவில் உண்மையாகவிருந்ததென்றும், தவறான செயல் பற்றிய அல்லது ஆரோக்கியம், பாதுகாப்பு அல்லது சூழலுக்கான பாரிய அச்சுறுத்தல்பற்றிய சான்றை வெளிக்காட்டியதென்ற நியாயமான நம்பிக்கையுடனும் செயலாற்றியுள்ளவரை, ஒரு சட்டப்படியான அல்லது தொழிற் கடப்பாட்டின் ஏதேனும் மீறுகையைப் பொருட்படுத்தாது, ஏதேனும் சட்டப்படியான, நிர்வாக அல்லது தொழில் தொடர்பான தடைக்கு அமைந்தவராகவிருத்தலாகாது.

(2) முதலாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, தவறான செயல் என்பது, ஒரு குற்றவியல் தவறைப் புரிதல், ஒரு சட்டப்படியான கடப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறுதல், நீதிப் பிறழ்வு, ஊழல் அல்லது நேர்மையீனம், அல்லது ஒரு பகிரங்க அமைப்பு தொடர்பாகப் பாரிய பிறழ்நிர்வாகம் என்பவற்றை உள்ளடக்கும்.

## மூலங்களை வெளிக்காட்டாதிருப்பதற்கான உரிமை

9. செய்தி ஊடகப் பரப்புகை மூலத்துக்கு அந்தரங்க அடிப்படையில் தகவல் வழங்கியுள்ள மூலத்தை இனங்காண்கின்ற தகவலை வெளிப்படுத்துவதற்கு ஆளெவரும் தேவைப்படுத்தப்படலாகாது.

(அ) ஊடகவியலாளரொருவர் எந்த வெளியீட்டுக்குப் பொறுப்பாளியாகவுள்ளாரோ அந்த வெளியீட்டில் அடங்கியுள்ள தகவலின் மூலத்தை வெளிக்காட்டும்படி நீதிமன்றம் எதுவும் அந்த ஊடகவியலாளரொருவரைத் தேவைப்படுத்துதலாகாது அல்லது அவ்வாறு வெளிக்காட்டுவதற்கு மறுத்தமையின் விளைவாக அவருக்கு எதிராக எவையேனும் பாதகமான அனுமானங்களும் எடுக்கப்படுதலாகாது.

(ஆ) ஆயின், தேசிய பாதுகாப்பு நலன்களுக்காக அல்லது ஒழுங்கின்மையை அல்லது குற்றச்செயல்களைத் தடுப்பதற்காகச் சனநாயகச் சமுதாயத்தில் வெளிக்காட்டுகை அவசியமாகவுள்ளதென உயர்நீதிமன்றத்தின் திருப்திக்கு நிலைநாட்டப்படின், ஊடகவியலாளரொருவரின் தகவல் மூலத்தை வெளிக்காட்டும்படி உயர்நீதிமன்றம் அவருக்குக் கட்டளையிடலாம்.

## திருத்துவதற்கான உரிமை

10. எவரேனும் நபரொருவரின் நற்பெயருக்கு அல்லது வேறு சட்டப்படியான உரிமைகளுக்குத் தீங்குவிளைவிக்கும் உண்மைக்கு மாறான தகவல் ஒரு செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தில் அறிக்கையிடப்படுமிடத்து, அந்த நபர், அத்தகவல் எந்த ஊடகப் பரப்புகை மூலத்தில் தோன்றியதோ அந்த ஊடகப் பரப்புகை மூலத்தில், கட்டணமின்றி, அத்தகைய செம்மையின்மையைத் திருத்திக்கொள்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வுரிமை பின்வரும் விதிகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்:

அ) நாளாந்தச் செய்தி ஊடக வெளியீட்டின், செய்தி ஊடகப் பரப்புகை மூலமாக உள்ள தொடரிணைச் செய்தி ஊடகச் சேவையின் அல்லது ஒலிபரப்பு உள்ளீட்டுச் சேவையின் விடயத்தில், திருத்தமானது, பெறப்பட்டதிலிருந்து மூன்று நாட்களினுள்ளும், வேறு செய்தி ஊடக வெளியீடுகளின் விடயத்தில், பெறப்பட்டதிலிருந்து மூன்று நாட்களை அடுத்துவருகின்ற அடுத்த வெளியீட்டிலும் உட்புகுத்தப்படுதல் வேண்டும்;

ஆ) தேர்தற் காலப்பகுதிகளின்போது, (அ) என்னும் உட்பிரிவில் தரப்பட்டுள்ள மூன்று நாட்காலப்பகுதி இருபத்துநான்கு மணித்தியாலங்களாகக் குறைக்கப்படுதல் வேண்டும்;

இ) திருத்த உரிமைக்கான உரிமைக் கோரிக்கையொன்று, அவ்வுரிமைக்கோரிக்கையை எழுப்பிய தகவல்கள் பரப்பப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

ஈ) உரிமைகோரப்பட்ட திருத்த உரிமையொன்றுக்கு மதிப்புக் கொடுப்பதற்குச் செய்தி ஊடகப் பரப்புகை மூலமொன்று மறுக்குமிடத்து, பாதிக்கப்பட்ட நபர், அத்திருத்தத்தை உட்புகுத்துவதற்குச் செய்தி ஊடகப் பரப்புகை மூலத்துக்குக் கட்டளையிடும்படி ஊடக தரநிர்ணயங்கள் பேரவைக்கு விண்ணப்பிக்கலாம்.

11. உட்பிரிவு (10இ) இன் கீழான விண்ணப்பம் எந்த ஊடக தரநிர்ணயப் பேரவையின்முன்னர் செய்யப்படுகின்றதோ அந்த ஊடக தரநிர்ணயப் பேரவை, அதனால் விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து இரண்டு வாரங்களினுள் அதன் முடிபைக் கொடுத்தல் வேண்டும்; ஆயின், தேர்தற்காலப்பகுதியின்போது, செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவை நியாயமானமுறையில் இயன்றளவு விரைவாக அதன் முடிபை அளித்தல் வேண்டும்.

**செய்தி ஊடகம் பொறுப்புக்கூறவேண்டியமை**

12. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தினால் பெயர்குறிக்கப்பட்டவாறான பிரதம ஆசிரியர், விளம்பரங்களுட்பட, செய்தி ஊடகத்தினாற் பரப்பப்பட்ட சகல உள்ளீடுகளுக்கும் பொறுப்புக்கூறவேண்டியவராதல் வேண்டும்.

13. பிரதம ஆசிரியர், செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட செயல்முறை ஒழுக்கக் கோவைகளின் மீறுகை பிரதம ஆசிரியருக்கு நேரடியாக ஏற்றிக்கூறப்படற்பாலதல்லாததாகவிருக்கும்போதுகூட, செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தில் உள்ளடக்கப்பட்ட எல்லா உள்ளீடுகளுக்காகவும் செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவைக்கு பொறுப்புக்கூறவேண்டியவராக இருத்தல் வேண்டும்.

14. ஒரு செய்திப் பரப்புகை மூலத்தின் பிரதம ஆசிரியர், ஊடகவியலாளர் அல்லது வேறெவரேனும் ஊழியர், செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட செயல்முறை ஒழுக்கக் கோவைகளை மீறுவதற்கு அவர் மறுத்தமை காரணமாக ஆளெவரும் அவருக்கு ஓரங்காட்டுதலாகாது, தடைகளை விதித்தலாகாது அல்லது அவரைத் தொழிலிலிருந்து முடிவுறுத்துதலாகாது.

15. செய்தி ஊடகப் பரப்புகை மூலங்கள், செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட இயைபான செயல்முறை ஒழுக்கக் கோவைகளை அவர்களின் ஊழியர்களுக்குப் பரப்புதல் வேண்டும்.

16. ஊடகவியலாளர்கள், தாம் விரும்பிய தொழில்சார் குழுக்களாகவும் சங்கங்களாகவும் தம்மை ஒழுங்குபடுத்திக்கொள்வதற்கான உரிமையைக் கொண்டிருப்பர்.

### பதிவுச் சான்றிதழ்

17. ஒரு செய்தி ஊடக வெளியீட்டை அல்லது ஒரு செய்தி ஊடகப் பரப்புகை மூலமாகவுள்ளவொரு தொடரிணைச் செய்தி ஊடகச் சேவையை வெளியிடுகின்ற அல்லது வெளியிட விரும்புகின்ற ஆளெவரும், (18) ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்ட தகவல்களை வழங்குவதன்மூலம் அத்தகைய வெளியீடுகளைச் செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவையிடம் பதிவுசெய்தல் வேண்டும்.

18. பதிவுப்படிவம் பின்வரும் தகவல்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

    அ. வெளியீட்டாளரின், பிரதம ஆசிரியரின் மற்றும் இயைபானவிடத்து, அச்சிடுபவரின் பெயரும் முகவரியும்; அத்துடன்

    ஆ. வெளியீட்டின் அல்லது பிரிவு 3.3 இன்கீழ் பதிவுசெய்கின்ற தொடரிணைச் செய்தி ஊடகச் சேவையின் மற்றும் எவையேனும் கிளையலுவலகங்களின் பெயரும் முகவரியும்.

19. ஒரு செய்தி ஊடக வெளியீட்டின் அல்லது ஒரு தொடரிணைச் செய்தி ஊடகச் சேவையின் உத்தேசிக்கப்பட்ட பெயர், இரண்டு பெயர்களுக்குமிடையே இலகுவாக மயக்கமேற்படக்கூடியவகையில் ஏலவே பதிவுசெய்யப்பட்டுள்ள அத்தகைய வேறோர் உருவகத்தின் பெயரை நெருங்கியமுறையில் அவ்வாறு ஒத்திருக்கின்றவிடத்து, வேறொரு பெயர் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

20. பதினெட்டாம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட தகவல்களுக்கான எவையேனும் மாற்றங்கள், செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவைக்குப் பதினைந்து நாட்களினுள் அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

21. பின்வருமிடத்து பதிவானது காலங்கடந்துபோதல் வேண்டும்:

    அ. வெளியீட்டின் அல்லது தொடரிணைச் செய்தி ஊடகச் சேவையின் தொடராமைபற்றி வெளியீட்டாளர் எழுத்திலான அறிவித்தலை வழங்குமிடத்து;

    ஆ. உள்ளீட்டுப் பரப்புகையில் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலஇடைவெளி உள்ளவிடத்து; அல்லது

    இ. பதிவுசெய்யப்பட்ட வெளியீடு அல்லது தொடரிணைச் சேவை, பதிவைப் பெற்றதிலிருந்து ஓராண்டினுள் அதன் சேவைகளைத் தொடங்காதிருக்குமிடத்து.

### பெயர்விபரப்பொறிப்பு மற்றும் கட்டணமில்லாப் பிரதிகள்

22. செய்தி ஊடக வெளியீடு, ஒவ்வொரு பதிப்பிலும், வெளியீட்டாளர், அச்சிடுபவர்ர் மற்றும் பிரதம ஆசிரியர் என்போரின் பெயர்களையும், பதிப்பிலக்கத்தையும், இடையீட்டு ஒழுங்கையும், வெளியீட்டுத் திகதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

23. ஒலி-ஒளிபரப்பு உள்ளீட்டுச் சேவையானது, நிலையப் பெயரையும் நிகழ்ச்சிக்குப் பொறுப்பாகவுள்ள தயாரிப்பாளரின் பெயரையும், ஒவ்வொரு நிகழ்ச்சியினதும் தொடக்கத்திலும் முடிவிலும் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

24. தேசியப் பகிர்வுடன் அல்லது கொழும்பை அமைவிடமாகக் கொண்ட செய்தி ஊடக வெளியீடுகள், பரப்புகையிலிருந்து 24 மணித்தியாலங்களுள், ஒவ்வொரு பதிப்பினதும் இரண்டு கட்டணமில்லாப் பிரதிகளைத் தேசியச் சுவடிக்கூடத்திடம் வைப்பிலிடுதல் வேண்டும்.

25. பிரிவு (24) இல் இனங்காணப்பட்டவை தவிர்ந்த செய்தி ஊடக வெளியீடுகள், குறைந்தபட்சம் ஆறுமாதங்களுக்கு அவற்றின் வளாகங்களில் இரண்டு பிரதிகளை வைத்திருத்தல் வேண்டும்.

26. ஒலி-ஒளிபரப்பு உள்ளீட்டுச் சேவைகள், அவை ஒலி-ஒளிபரப்பும் சகல விடயங்களும் பற்றிய பதிவுசெய்யப்பட்ட உரைகளை ஆகக்குறைந்தது ஆறுமாதங்களுக்கேனும் வைத்திருத்தல் வேண்டும்.

27. ஒரு செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தினால் பரப்பப்பட்ட உள்ளீடு, நீதிமன்றங்களின் அல்லது செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவையின் முன்னரான பிணக்கொன்றின் விடயமாகவுள்ளவிடத்து, (25) ஆம், (26) ஆம் பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட உள்ளீட்டினை வைத்திருக்கும் காலப்பகுதி, மேற்கொண்ட மேன்முறையீட்டுக்கான ஏதேனும் சந்தர்ப்பம் எழுவதற்கிடமில்லையென்றவகையில் அப்பிணக்கானது இறுதியாக முடிபுசெய்யப்படும்வரை தொடர்ந்திருத்தல் வேண்டும்.

## செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவை

28. (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவை எனவழைக்கப்படுவதுமான அமைப்பொன்று இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும். பேரவையின் குறிக்கோள்கள், இலங்கையில் செய்தி ஊடகத்தின் தரநிர்ணயங்களைப் பேணுதலும் சீராக்குதலுமாதல் வேண்டும்.

29. பேரவையானது (28) ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால், இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட அமைப்பொன்றாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் கூட்டிணைப்புப் பெயரில் வழக்குத்தொடுக்கலாம், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

30. அ. அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மேல் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பேரவையின் தவிசாளருட்பட, பேரவையானது பதின்மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

ஆ. அரசியலமைப்புப் பேரவை (அ) என்னும் உட்பிரிவின்கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுகையில் பின்வருவோரை விதந்துரைத்தல் வேண்டும்:

i. செய்தி ஊடக வெளியீட்டாளர்கள், செய்தி ஊடக உரிமையாளர்கள் மற்றும் செய்தி ஊடகப் பரப்புகைமூலங்களின் பிரதம ஆசிரியர்களைப்

பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒழுங்கமைப்புகளிலிருந்து பெறப்பட்ட பெயர்நியமனங்களுளிருந்து தெரிவுசெய்யப்பட்ட நான்கு தரமிக்க நபர்கள்;

ii. தொழிலாற்றும் ஊடகவியலாளர்களின் கழகங்களிலிருந்தும் சங்கங்களிலிருந்தும் பெறப்பட்ட பெயர்நியமனங்களுளிருந்து தெரிவுசெய்யப்பட்ட நான்கு தரமிக்க நபர்கள்;

iii. இலங்கைப் பத்திரிகை நிறுவகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு வைத்திருக்கப்பட்ட பகிரங்கக் கலந்தாலோசனையினூடாகப் பெறப்பட்ட பெயர்நியமனங்களுளிருந்து தெரிவுசெய்யப்பட்ட நான்கு தரமிக்க நபர்கள்; ஆயின், அவர்கள், செய்தி ஊடக ஒழுங்கமைப்புகளிலிருந்தானவர்களாக இருத்தலாகாது, அல்லது இலங்கைப் பத்திரிகை நிறுவகம் ஒரு பகிரங்கக் கலந்தாலோசனையினூடாகப் பெயர்நியமனங்களைச் செய்வதற்கு இயலாதிருக்கும் விடயத்தில், மனிதவுரிமைகள், சட்டவாட்சி, வெளிப்பாட்டுச் சுதந்திரம் அல்லது தகவல் பெறுவதற்கான உரிமைகளை மேம்படுத்துவதற்குப் பங்களித்துள்ள தொழில்சார் கழகங்களினாலும் சிவில் சமூக ஒழுங்கமைப்புகளினாலும் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்நியமனங்களுளிருந்து அவர்கள் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்;

iv. ஒரு சட்டத்தரணியாக, இளைப்பாறிய நீதிபதியாக அல்லது சட்டவியல் அறிஞராக உள்ள ஒரு தரமிக்க நபர்; அவர் பேரவையின் தவிசாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் கலந்தாலோசனையுடன் பெயர்குறித்துநியமிக்கப்படுதலும் வேண்டும்.

(இ) உட்பிரிவு (ஆ) இன்கீழான பெயர்நியமனங்கள், இயைபான ஒழுங்கமைப்புகளுக்கு அரசியலமைப்புப் பேரவையினால் அனுப்பப்பட்ட பெயர்நியமனங்களுக்கான கோரிக்கையின் அடிப்படையில் செய்யப்படுதல் வேண்டும்; ஆயின், எவ்வாறாயினும், (i) ஆம், (ii) ஆம் உட்பிரிவுகளின்கீழான நியமிக்கப்படுபவர்கள், பெயர்குறித்துநியமிக்கப்பட்ட ஆட்களிடையே அதே முகாமைத்துவத்தினது அல்லது சொத்தாண்மையினது கட்டுப்பாட்டின்கீழான ஏதேனும் செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தில் அல்லது செய்தி ஊடகப் பரப்புகை மூலங்களின் தொகுதியில் அக்கறைகொண்டுள்ள ஒருவருக்கு மேற்படாதவர்கள் இராதிருக்கும்வகையில் அவ்வாறு நியமிக்கப்படுதல் வேண்டும்.

31. அரசியலமைப்புப் பேரவை,பிரிவு (30) இன்கீழான அதன் விதப்புரைகளைச் செய்யுமுன்னர், முறையே உட்பிரிவுகள் (30) (ஆ) (i), (ii) மற்றும் (iii) இல் குறிப்பிடப்பட்ட மூன்று வகுதிகளுள் ஒவ்வொன்றிலிருந்தும் [ஆகக்குறைந்தது எட்டு ஆட்களைக்கொண்ட/எட்டு ஆட்கள் வரை] குறுகிய நிரலொன்றை வெளியிடுதல் வேண்டுமென்பதுடன், விதந்துரைக்கப்படவேண்டிய மிகப்பொருத்தமான பன்னிரெண்டு ஆட்கள் பற்றிய பொதுவான கருத்தொருமையைப் பெறுவதற்குப் பகிரங்கக் கலந்தாலோசனையொன்றை

நடாத்துதலும் வேண்டும்; விதந்துரைக்கப்படும் ஆட்கள் மொழி மற்றும் இன பல்வகைமையை, பெண்களை, புவியியற்சார் பிரதிநிதித்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆட்களாகவிருப்பதனையும், மனிதவுரிமைகள், ஊடகவியல், வெகுசன ஊடகம், சட்டம், அரசியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள், விஞ்ஞானங்கள், இலக்கியம் அல்லது கல்வி என்ற துறைகளில் எண்பிக்கப்பட்ட அறிவு, அனுபவம் மற்றும் திறமையுடன் பகிரங்க வாழ்க்கையில் சிறப்புப்பெற்ற ஆட்களாகவிருப்பதனையும் அது உறுதிப்படுத்துதல் வேண்டும்;

32. (அ) நியமிக்கப்படுபவர்களுள் போதிய எண்ணிக்கையினராகவிராதோர் இதன்கண் தரப்பட்டுள்ள நியமங்களை ஈடுசெய்கின்றனரென அரசியலமைப்புப் பேரவை அபிப்பிராயப்படும் பட்சத்தில், புதிய பெயர்நியமனங்கள் கோரப்படுதல் வேண்டும்.

(ஆ) அரசியலமைப்புப் பேரவை பேரவையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்குக் கவனத்துட்கொள்ளப்படுகின்ற எவரேனும் நபரை, விதப்புரைகள் தொடர்பாக அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அது தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவல்களை அதற்குக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம்.

33. அரசியலமைப்புப் பேரவையானது, இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து அல்லது பேரவையில் வெற்றிடமொன்று எழுகின்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் (30) ஆம் பிரிவின்கீழான அதன் விதப்புரைகளைச் செய்தல் வேண்டும். அரசியலமைப்புப் பேரவையினால் விதிக்கப்பட்டவாறு நியாயமானவொரு காலப்பகுதியினுள் சம்பந்தப்பட்ட ஒழுங்கமைப்புகள் தோதான பெயர்நியமனங்களைச் செய்வதற்குத் தவறும் பட்சத்தில், அரசியலமைப்புப் பேரவை, (30) ஆம், (31) ஆம் பிரிவுகளில் தரப்பட்டுள்ள பிரதிநிதித்துவ ஒழுங்கேற்பாடுகளுக்கிணங்க அதன் சொந்த விதப்புரைகளைச் செய்தல் வேண்டும்.

34. சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரைகளைப் பெற்றதிலிருந்து பதினான்கு நாட்களினுள், பேரவையின் தவிசாளரையும் உறுப்பினர்களையும் நியமித்தல் வேண்டும். [அத்தகைய பதினான்குநாட்காலப்பகுதியினுள் அவசியமான நியமனங்களைச் செய்வதற்குத் சனாதிபதி தவறும் பட்சத்தில், பேரவையின் உறுப்பினர்களாகவிருப்பதற்கு அரசியலமைப்புப் பேரவையினால் விதந்துரைக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய காலப்பகுதி முடிவுற்ற திகதியிலிருந்து பேரவையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனரெனக் கருதப்படுதல் வேண்டும்.]

35. பேரவையின் உறுப்பினர்கள் நான்காண்டுக் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், அதிகபட்சம் இரண்டு தவணைகளுக்குச் சேவையாற்றும் வகையில் மீளத்தேர்ந்தெடுக்கவும்படலாம்.

36. பேரவையானது பின்வருவோரை நியமித்தல் வேண்டும்:

அ. பேரவையின் பிரதான நிறைவேற்றலுவலராக இருக்கவேண்டிய முகாமைப் பணிப்பாளரொருவரும், முகாமைப் பணிப்பாளரின் கலந்தாலோசனையுடன் அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களும் ஏனைய ஊழியர்களும்.

ஆ. முகாமைப் பணிப்பாளர், பேரவையின் அலுவல்களினது பொதுவான மேற்பார்வை, பணிப்பு மற்றும் முகாமைக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், பேரவையின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் வேண்டும்.

இ. உட்பிரிவு (அ) இன்கீழ் நியமிக்கப்பட்ட முகாமைப் பணிப்பாளரும் ஏனைய அலுவலர்களும் ஊழியர்களும், பேரவையினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய சேவை நியதிநிபந்தனைகளுக்கு அமைந்தோராதல் வேண்டுமென்பதுடன், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் பேரவையினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய ஊதியம் அவர்களுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**பேரவையின் பணிகளும் அதிகாரங்களும்**

37. (அ) பேரவையானது இச்சட்டத்தின்கீழ் அதன் கடமைகளை நிறைவேற்றுவதிலும் அதன் அதிகாரங்களைப் பிரயோகிப்பதிலும் சுயாதீனமாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கை அரசியலமைப்புக்கும் சட்டத்துக்கும் மட்டுமே அமையவிருத்தலும் வேண்டும்; அத்துடன் பாரபட்சமில்லாதிருத்தலும் அதன் பணிகளைப் பயமோ, அனுகூலமோ அல்லது பங்கமோ இன்றிப் புரிதலும் வேண்டும். பேரவை ஏதேனும் அரசியல் அல்லது வேறு பிணிப்புகள் அல்லது தலையீடு இன்றி பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், அரசாங்கமும் அதன் நிர்வாகமும், அல்லது ஏதேனும் அரசியற்கட்சி, அல்லது எவரேனும் ஊடகச் சொந்தக்காரர் அல்லது விளம்பரப்படுத்துநர் அல்லது அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் அரசியற்கட்சியின், அல்லது ஓர் ஊடக உரிமையாளரின் அல்லது விளம்பரதாரரின் அக்கறைகளை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேறெவரேனும் பணியாற்றுநரிலிருந்து அல்லது குழுவிலிருந்து முழுமையாகச் சுயாதீனமானதாகவும் தனிவேறானதாகவும் இருத்தலும் வேண்டும். பேரவை அதன் பணிகளை நிறைவேற்றுவதில், வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைப் பேணிக்காப்பதற்கும் பொதுமக்களின் நலனுக்காகச் சேவையாற்றுவதற்கும் முதனிலைக் கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

(ஆ) பேரவையின் கடமைகளும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்:

i. செய்தி ஊடக உரிமையாளர்கள், செய்தி ஊடக வெளியீட்டாளர்கள், செய்தி ஊடகப் பரப்புகை மூலங்களின் ஊடகவியலாளர்களும் ஊழியர்களும், செய்தி ஊடகத்துக்கு இயைபான துறைகளிலான நிபுணர்கள் என்போரினது பிரதிநிதித்துவ ஒழுங்கமைப்புகளுக்கும் மற்றும் இயைபான சிவில் சமூக ஒழுங்கமைப்புகளுட்பட வேறு இயைபான அக்கறைகொண்டுள்ளோர் ஒழுங்கமைப்புகளுக்கும் கலந்தாலோசனை ரீதியிலான அந்தஸ்தை அளித்தல்;

ii. முதலாவது பேரவை நியமிக்கப்பட்டதிலிருந்து நான்கு மாதங்களினுள்ளும், அதன்பின்னர் தேவை

எழுகின்றபோதெல்லாம், சர்வதேச தரநிர்ணயங்களினதும் மிகச்சிறந்த செயல்முறைகளினதும் அடிப்படையின்மீதும் பேரவையிடம் கலந்தாலோசனைரீதியிலான அந்தஸ்தைக் கொண்டுள்ள நிபுணர்கள், ஊடகவியலாளர் மற்றும் பதிப்பாசிரியர்கள் கழகங்களுடனும் சங்கங்களுடனும் வேறு அக்கறைகொண்டுள்ளோர் ஒழுங்கமைப்புகளுடனுமான பகிரங்கக் கலந்தாலோசனையை அடுத்துப்பின்னரும் தீர்மானிக்கப்பட்ட செய்தி ஊடகப் பரப்புகை மூலங்களுக்கான செயல்முறை ஒழுக்கக் கோவைகளை நிறைவேற்றுதல்;

iii. உட்பிரிவு (ஆ)-(ii) இன்கீழ் நிறைவேற்றப்பட்ட செயல்முறை ஒழுக்கக் கோவைகளை ஆகக்குறைந்தது மூன்றாண்டுகளுக்கொருதடவையேனும் பரிசீலனை செய்தலும் அவசியமாயின், பேரவையிடம் கலந்தாலோசனை ரீதியிலான அந்தஸ்தைக்கொண்ட இயைபான அக்கறை கொண்டுள்ளவரின் கலந்தாலோசனையுடன் மீளாய்வுகளைச் செய்தலும்;

iv. பேரவையினால் நிறைவேற்றப்பட்ட செயல்முறை ஒழுக்கக் கோவைகளுக்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்குச் செய்தி ஊடகப்பரப்புகை மூலங்களின் செயல்நிறைவேற்றத்தைக் கண்காணித்தல்;

v. பேரவையின் முறைப்பாடுகளினது அல்லது தாமாகவே செய்யும் அவதானிப்புகளின் அடிப்படையில், பேரவையினால் நிறைவேற்றப்பட்ட செயல்முறை ஒழுக்கக் கோவைகளின் மீறுகைகள் பற்றிய விசாரணைகளை நடாத்துதலும் முறைப்பாடுகளின் விடயத்தில் முடிபுகளை வழங்குதலும்;

vi. பாதிக்கப்பட்ட திறத்தவரினாற் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடொன்றின் அடிப்படையில் செய்தி ஊடகப் பரப்புகை மூலங்களினாலான சார்த்தப்பட்ட திருத்த உரிமை மறுப்புப்பற்றி விசாரணைகளை நடாத்துதல்;

vii. பேரவையினால் நிறைவேற்றப்பட்ட செயல்முறை ஒழுக்கக்கோவைகளைச் செய்தி ஊடகத்தின் ஊடகவியலாளர்களும் ஊழியர்களும் மீறுவதற்கு மறுத்தமை காரணமாக, அச்சுறுத்தல், முட்டுக்கட்டை, ஓரங்காட்டுகை அல்லது வஞ்சிக்கப்படுத்தப்படுகைபற்றிய குற்றஞ்சாட்டுதல்கள் தொடர்பாக அவர்களினாற் செய்யப்பட்ட முறைப்பாடுகள்பற்றி விசாரணைகளை நடாத்துதல்;

viii. விசாரணைகளை நடாத்துவதற்கான நடவடிக்கை முறைகளைத் தீர்மானித்தலும், நிலைநாட்டுதலும், வெளியிடுதலும்;

ix. உட்பிரிவு (37)-(ஆ)-(i) இன்கீழ் ஒழுங்கமைப்புகளுக்குக் கலந்தாலோசனை ரீதியிலான அந்தஸ்தை அளிப்பதற்கான

நடவடிக்கைமுறைகளைத் தீர்மானித்தலும், நிலைநாட்டுதலும், வெளியிடுதலும்;

x. செய்தி ஊடகப் பரப்புகை மூலங்கள் பற்றிய பகிரங்கப் பதிவகத்தைப் பேணுதல்; இது, செய்தி ஊடக உரிமையாளர்களினதும், செய்தி ஊடகக் கம்பனிப் பணிப்பாளர்களினதும், பங்குகளின் 5 சதவீதத்துக்கு மேற்பட்டவற்றைச் சொந்தமாக வைத்திருக்கின்ற செய்தி ஊடகப் பங்குதாரர்களினதும் செய்தி ஊடக வெளியீட்டாளர்களினதும், பிரதம ஆசிரியர்களினதும், மற்றும் செய்தி ஊடக அச்சிடுபவர்களினதும், பெயர்களையும் தொடர்பு விபரங்களையும், செய்தி ஊடக வெளியீட்டினது சுற்றோட்டத் தொகையினையும், மற்றும் பேரவையிடம் கலந்தாலோசனை ரீதியிலான அந்தஸ்தைக்கொண்ட நிபுணர்களினதும் ஒழுங்கமைப்புகளினதும் விபரங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்;

xi. ஊடகவியலின் அடிப்படைகள்மீதான பயிற்சிப் பயன்பாட்டுப் பொருட்களையும் வெளியீடுகளையும் தயாரித்தலுட்பட, பயிற்சி மற்றும் கல்விசார் செயற்பாடுகளில் ஒத்துழைத்தல் அல்லது அவற்றைப் பொறுப்பேற்றல் மற்றும் நிறைவேற்றப்பட்ட செயல்முறை ஒழுக்கக் கோவைகளைப் பயனுற அமுலாக்குதல்;

xii. இச்சட்டத்தின் (40) ஆம் பிரிவுக்கிணங்க அவதூறுபற்றிய குற்றஞ்சாட்டுதல்கள்மீது செய்தி ஊடகப் பரப்புகை மூலங்களுக்கெதிராக விசாரணைகளை நடாத்துதல்;

xiii. செய்தி ஊடகச் சுதந்திரத்தையும் ஊடகவியலாளர்களினதும் ஊடகப் பணியாளர்களினதும் பாதுகாப்பையும் இயலுமாக்குகின்ற சூழலை வழங்குதல் தொடர்பான கருமங்கள்மீது அரசாங்கத்துக்கு மதியுரையளித்தல்;

xiv. செய்தி ஊடகப் பரப்புகை மூலம் செயல்முறை ஒழுக்கக்கோவைகளுக்கு இணங்கியொழுகியமைபற்றிப் பொதுமக்களின் புலனுணர்வை மதிப்பிடுவதற்கு அட்டவணை II இல் தரப்பட்டுள்ள நடவடிக்கைமுறைகளுக்கிணங்க, ஆண்டுக்கொருதடவையேனும், திறந்த பகிரங்கக் கலந்தாலோசனைகளை நடாத்துதல்; அத்துடன்

xv. இச்சட்டத்தின் தேவைப்பாடுகளையும் சட்டத்தின்கீழ் தனியாட்களின் உரிமைகளையும் பிரசித்தப்படுத்துதல்.

38. பேரவையானது, இச்சட்டத்தின்கீழ் அதன் கடமைகளைப் புரிவதிலும் அதன் பணிகளை நிறைவேற்றுவதிலும் பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

அ. ஊடக ஒழுங்கமைப்புகளினதும் இயைபான சிவில் சமூக ஒழுங்கமைப்புகளினதும் வெளியீட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊழியர்களின் பிரதிநிதித்துவ

ஒழுங்கமைப்புகளுக்குக் கலந்தாலோசனை ரீதியிலான அந்தஸ்தை அளித்தல்;

ஆ. செய்தி ஊடகத்துக்கான செயல்முறை ஒழுக்கக் கோவைகளை நிறைவேற்றுதல்;

இ. பிரிவு (37)-(ஆ) இன்கீழ் குறிப்பிடப்பட்ட விசாரணைகளுட்பட பேரவையின் நடவடிக்கைகளுக்கான நடவடிக்கைமுறைகளைத் தீர்மானித்தல்;

ஈ. ஒரு முறைப்பாட்டைக் கேட்பதற்கு ஏற்றுக்கொள்ளுதல், அல்லது பேரவையின் கருத்தில் இயைபானதன்மையெதனையும் கொண்டிராதவொரு முறைப்பாட்டை ஏற்றுக்கொள்வதற்கு மறுத்தல்;

உ. இச்சட்டத்தின்கீழான விசாரணைகளை நடாத்துதலும், அந்நோக்கத்துக்காக எவரேனும் நபரை அதன்முன்னர் தோன்றும்படி தேவைப்படுத்துதலும்;

ஊ. அத்தகைய நபரைச் சத்தியம் அல்லது உறுதியுரையின்கீழ் விசாரணைசெய்தலும், அந்த நபரின் உடைமையிலுள்ள ஏதேனும் தகவலைக் காண்பிக்கும்படி அவசியமானவிடத்து அத்தகைய நபரைத் தேவைப்படுத்துதலும்;

எ. இச்சட்டத்தின்கீழ் செய்தி ஊடகப் பரப்புகை மூலமொன்றின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையானதும் அதனால் வைத்திருக்கப்பட்டதுமான ஏதேனும் தகவலைக் கோருதல்;

ஏ. இன்னலுற்ற ஆளொருவரினால் அதற்குச் செய்யப்பட்டனவும் செயல்முறை ஒழுக்கக் கோவைகளின் சார்த்தப்பட்ட மீறுகைகள் பற்றியனவுமான எவையேனும் முறைப்பாடுகளைக் கேட்டுத் தீர்மானித்தல்;

ஐ. விடயத்துக்கேற்ப, செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தை, பிரதம ஆசிரியரை, அல்லது ஊடகவியலாளரை எச்சரித்தல், அல்லது கண்டித்தல் அல்லது பிரதம ஆசிரியரின் அல்லது ஊடகவியலாளரின் நடத்தையை அங்கீகரிக்கமறுத்தல்;

ஒ. செயல்முறை ஒழுக்கக் கோவைகளை அமுலாக்குதல் சம்பந்தமான பிணக்குகளின்மீது செய்தி ஊடகப் பரப்புகை மூலங்களின் தொழில்தருநர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையே மத்தியஸ்தஞ்செய்தல்;

ஓ. பேரவையினால் விதித்துரைக்கப்பட்டவொரு முறையில் பேரவையின் முடிபை வெளியிடும்படி அல்லது ஒலி-ஒளிபரப்பும்படி செய்தி ஊடகப் பரப்புகை மூலமொன்றைப் பணித்தல் பொதுமக்களின் நலன்கருதி அவசியமாகவுள்ளதென அல்லது உசிதமாகவுள்ளதெனப் பேரவை அபிப்பிராயப்படின், அதனை அவ்வாறு செய்தல்;

ஔ. பேரவையின் கருத்தில் செயல்முறை ஒழுக்கக் கோவைகளின் மீறுகையாகவுள்ள விளம்பரங்களை நிறுத்திவிடும்படி செய்தி ஊடகப் பரப்புகை மூலமொன்றைப் பணித்தல்;

க. பேரவையினால் விதித்துரைக்கப்பட்டவொருமுறையில் திருத்தமொன்றை வெளியிடும்படி அல்லது ஒலி-ஒளிபரப்பும்படி செய்தி ஊடகப் பரப்புகை மூலங்களைப் பணித்தல்;

ங. உறுப்பினர்களை அல்லது உறுப்பினர்கள் அல்லாதோரை அல்லது உறுப்பினர்களையும் உறுப்பினர்கள் அல்லாதோரையும் கொண்டுள்ள குழுக்களை நியமித்தலும், பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பணிகளை அவர்களுக்குக் குறித்தொதுக்குதலும்; ஆயின், உறுப்பினர்கள் அல்லாதோரை உள்ளடக்கும் குழுவொன்று பேரவைக்கு மதியுரை மட்டுமே அளிக்கலாம்;

ச. பேரவையின் அதிகாரங்களுள் எவற்றையும், விதிப்பதற்குத் தகுதியானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, அதன் தவிசாளருக்கு அல்லது அதன் குழாமொன்றுக்குக் கையளித்தல்;

ஞ. உட்பிரிவு (37)-(ஆ)-(xv) இன்கீழ் விதிக்கப்பட்ட விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செய்தி ஊடகத்திடமிருந்து சேகரித்தல்:

ஆயின், இப்பிரிவிலுள்ளதெதுவும், ஏதேனும் செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தினால், பிரதம ஆசிரியரினால் அல்லது ஊடகவியலாளர்களினால் வெளியிடப்பட்ட அல்லது பெறப்பட்ட ஏதேனும் செய்தியின் அல்லது தகவலின் மூலத்தை வெளிக்காட்டுவதற்கு அச்செய்தி ஊடகத்தை, பிரதம ஆசிரியரை அல்லது ஊடகவியலாளரைக் கட்டாயப்படுத்துவதாகக் கருதப்படுதலாகாது.

39. (அ) பேரவையானது, பின்வரும் விதிகளுக்கிணங்க, ஒவ்வொரு மாதத்திலும் ஆகக்குறைந்தது ஒரு தடவையேனும் அல்லது அதன் அலுவல்களை நடாத்துவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான வகையில் கூடுதல் வேண்டும்:

i. பேரவையானது அதன் அங்குரார்ப்பணக் கூட்டத்தில், அதன் உறுப்பினர்களுளிருந்து ஒரு துணைத் தவிசாளரையும் [செயலாளரையும்] நியமித்தல் வேண்டும்.

ii. பேரவையானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அதன் பணிகளைப் புரிவதற்கு அதனை இயலச்செய்வதற்கு அவசியமானதென மற்றும் பொருத்தமானதென அது கருதுகின்றவாறாக, கூட்டங்கள், முறைப்பாடுகள், விசாரணை நடவடிக்கைமுறைகள் மற்றும் வேறு கருமங்கள் தொடர்பான அத்தகைய விதிகளையும் நடவடிக்கைமுறைகளையும் நிறைவேற்றுதலும் வெளியிடுதலும் வேண்டும்.

iii. பேரவையின் கூட்டங்களுக்கான கூட்டநடப்பெண் ஏழாதல் (7) வேண்டும்.

iv. பேரவைக் கூட்டத்திலான முடிபொன்று, பேரவையினால் வேறுவகையாக முடிபுசெய்யப்பட்டவாறுதவிர, சமுகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் சாதாரணப் பெரும்பான்மையினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்; ஆயின், வாக்குகள் சமமாகவிருக்கும் விடயத்தில், கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் உறுப்பினர், அவரது மூலவாக்குடன் சேர்த்து அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

v. பேரவையின் தவிசாளர், பேரவையின் சகல கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும்; ஆயின், தவிசாளர் வருகைதராதவிடத்து, துணைத் தவிசாளர் தலைமைதாங்குதல் வேண்டுமென்பதுடன், தவிசாளரும் துணைத்தவிசாளரும் வருகைதராதவிடத்து, சமுகமளித்துள்ள உறுப்பினர்கள், அக்கூட்டத்தில் தலைமைதாங்குவதற்குத் தம்முள்ளிருந்து உறுப்பினரொருவரைத் தேர்ந்தெடுத்தலும் வேண்டும்.

vi. பேரவையின் ஏதேனும் கருமத்தின்மீது அல்லது வேறு நடவடிக்கையின்மீது பேரவையினால் எடுக்கப்படவுள்ள ஏதேனும் முடிபில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறைகொண்டுள்ள பேரவையின் உறுப்பினரொருவர், அத்தகைய முடிபு எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பேரவையின் கூட்டத்தில் அல்லது அத்தகைய வேறு நடவடிக்கை தொடங்குவதற்குமுன்னர் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிக்காட்டுதல் வேண்டும். அவ்வெளிக்காட்டுகையானது கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளில் அல்லது இயைபான நடவடிக்கையில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன், பேரவையானது, அதன்பின்னர் அத்தகைய உறுப்பினர் அக்கருமம்தொடர்பில் பேரவையின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதல் வேண்டுமாவென்பதைத் தீர்மானித்தலும் வேண்டும்.

vii. பேரவையானது, அதன் கூட்டங்கள் தொடர்பானதும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் தொடர்பானதுமான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

viii. பேரவையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

(ஆ) இச்சட்டத்துக்கான அட்டவணையிலுள்ள ஏற்பாடுகள், பேரவை உறுப்பினர்களுக்கு அல்லது அவர்கள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**செய்தி ஊடகத்துக்கெதிராகச் குற்றஞ்சாட்டப்பட்ட அவதூறைக் கையாளுதல்**

40. இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட செய்தி ஊடகப் பரப்புகை மூலத்துக்கெதிராக, ஆளெவரும், சார்த்தப்பட்ட அவதூறின் விடயத்தில் செயல்முறை ஒழுக்கக் கோவைகளின் ஏதேனும் மீறுகை ஏற்பட்டுள்ளதாவென்பதைத் தீர்மானிப்பதற்குப் பேரவையை அனுமதித்து, பேரவைக்கான முறைப்பாட்டினூடாகக் கருமத்தை முதலில் விசாரணைசெய்யாமல், நீதிமுறை நீதிமன்றங்களில் அவதூறுக்கான வழக்கொன்றைக் சமர்ப்பித்தலாகாது.

41. பேரவையினால் கருமமானது முடிபுசெய்யப்பட்டுள்ளபோதிலும், அவதூறுக்கான நட்டஈட்டை நாடி சட்ட வழக்கொன்றைத் தொடர்ந்துநடாத்துவதற்கு விரும்புகின்ற எவரேனும் நபர், உரிமைகோரப்பட்ட பணவகையான நட்டஈட்டின் 10 சதவீதத்துக்குச் சமமான பணத்தொகையொன்றைப் பேரவையிடம் வைப்பிலிடுதல் வேண்டும்.

42. பிரிவு (41)யைப் பின்பற்றி இடப்பட்ட ஏதேனும் வைப்பு, நீதிமுறை வழக்குநடவடிக்கைகளின் முடிவில் நீதிமன்றத்தின் முடிபைப் பின்பற்றி அந்த நபருக்குத் திருப்பிக்கொடுக்கப்படலாம் அல்லது இழப்பிக்கப்படலாம்.

(42) ஒரு செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தின் சார்த்தப்பட்ட அவதூறான கூற்றைக் கவனத்திற்கொள்ளும் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளில்:

நீதிமன்றம், சம்பந்தப்பட்ட கூற்றை வெளியிட்டமை நீதியானதும் நியாயமானதுமாக இருந்ததாவென்பதைத் தீர்மானிக்கையில், ஒரு செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தில் வெளியிடப்பட்டவொரு கூற்றின் விடயத்தில், அச்செய்தி ஊடகப் பரப்புகை மூலம் பேரவையின் செயல்முறை ஒழுக்கக் கோவையைப் பின்பற்றிய மற்றும் அதன் தீர்மானங்களுக்கு அமைந்தொழுகிய அளவைத் கவனத்துக்கெடுத்தல் வேண்டும்.

**பேரவையின் விடுபாட்டுரிமைகள்**

43. பேரவையின்மீது, அதன் உறுப்பினர்களின்மீது அல்லது அதில் தொழிலுக்கமர்த்தப்பட்ட பணியாட்டொகுதியினரின்மீது விதிக்கப்பட்ட அல்லது அவர்களுக்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் பணியை அல்லது தத்துவத்தைப் புரிகையில் அல்லது பிரயோகிக்கையில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட எதற்காகவும் பேரவைக்கு, அதன் உறுப்பினர்களுக்கு அல்லது பேரவையினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனுமாளுக்குக் குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்பெதுவும் எழுதலாகாது.

**பேரவையின் முடிபுகளுக்கெதிரான மேன்முறையீடுகள்**

44. உட்பிரிவுகள் (37)-(ஆ)-(v), (vi) மற்றும் (vii) இன்கீழ் பேரவையின் முடிபொன்றினால் இன்னலுறும் செய்தி ஊடகப் பரப்புகை மூலம் அல்லது ஆள், அத்தகைய முடிபுக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடுசெய்யலாம்.

45. இப்பிரிவின்கீழான மேன்முறையீடுகள் தொடர்பில் அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழான விதிகள் ஆக்கப்படும்வரை, மீளாய்வு என்றவகையாக விண்ணப்பமொன்று தொடர்பில் அவ்வுறுப்புரையின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் (44) ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு மேன்முறையீடு தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**பேரவைக்கு நிதியளித்தலும் அதன் செயற்பாடுகளும்**

46. பேரவை அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்; பின்வருவன அதனுள் வரவுவைக்கப்படுதல் வேண்டும்:

அ. பேரவையின் பாவனைக்காகப் பிரிவுகள் (47), (48) மற்றும் (50) என்பவற்றுக்கிணங்கப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சகல நிதித்தொகைகளும்;

ஆ. இலங்கையிலாயினும்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினும்சரி, எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் பெறப்பட்ட நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள்; ஆயின், மூலங்களும் அத்தகையவொரு நன்கொடை, மானியக்கொடை அல்லது கொடை எந்த நோக்கத்துக்காகக் கிடைக்கக்கூடியனவாக்கப்பட்டனவோ அந்த நோக்கமும் பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும்;

இ. உட்பிரிவு (37)-(ஆ)-(xv)இன்கீழ் விதிக்கப்பட்ட செய்தி ஊடகப் பரப்புகை மூலத்திலிருந்தான விதித்துரைக்கப்பட்ட கட்டணங்கள்;

ஈ. பிரிவு (59) இன்கீழ் நீதிமன்றங்களினால் விதிக்கப்பட்ட குற்றப்பணங்கள்.

47. பேரவையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், முற்போந்த நிதியாண்டின் முடிவுக்கு 90 நாட்களுக்கு முன்னர் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரிடம் அத்தகைய வரவு-செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்தலும் வேண்டும்; அத்தகைய வரவுசெலவுத்திட்டம்-

அ. அதன் எதிர்வுகூறப்பட்ட வருமானமும் செலவினமும் எவ்வாறாக்கப்பட்டதென்பதை வகுதியாகக் குறித்துரைத்தல் வேண்டும்;

ஆ. எதிர்வரும் ஆண்டில் அதன் உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளைக் குறிப்பீடு செய்வதன்மூலம் அத்தகைய எதிர்வுகூறுகைகளில் அடங்கியுள்ள ஊகங்கள் பற்றிய விளக்கக்கூற்றையும் அத்தகைய எதிர்வுகூறுகைகளுக்கான நியாயத்தன்மையையும் அல்லது நியாயப்படுத்துகையையும் உள்ளடக்குதல் வேண்டும்.

48. நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், பிரிவு (47) இன்கீழ் தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தைப் பெற்றதன்மீது:

அ. பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக அத்தகைய வரவு-செலவுத்திட்டத்தின் பிரதியொன்று அதன்முன்னர் இடப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்;

ஆ. அத்தகைய வரவு-செலவுத்திட்டத்திலிருந்து எழுகின்ற ஏதேனும் கருமத்தைப் பாராளுமன்றத்துக்கு அல்லது பாராளுமன்றத்தின் ஒரு குழுவுக்குத் தெளிவுபடுத்தும்படி பேரவை உறுப்பினர்களைத் தேவைப்படுத்தலாம்; அத்துடன்

இ. அத்தகைய வரவு-செலவுத்திட்டத்தைப் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டுவருவதற்குத் தோதானதென அவர் அல்லது அவள் கருதுகின்றவாறான அத்தகையமுறையில் அதனை வெளியிடும்படி பேரவையைத் தேவைப்படுத்தலாம்.

49. பாராளுமன்றத்தின்முன்னர் அத்தகைய வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து 90 நாட்களினுள் அத்தகைய வரவு-செலவுத்திட்டத்துக்கான ஆட்சேபணையெதுவும் அதனால் எழுப்பப்படாவிடின், அத்தகைய வரவு-செலவுத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

50. பேரவையானது ஏதேனுமாண்டுக்கான அதன் வரவு-செலவுத்திட்டத்தை அவ்வாண்டில் மீளாய்வுசெய்யலாமென்பதுடன், அத்தகைய மீளாய்வை நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்குச் சமர்ப்பிக்கலாம்; அத்துடன் பிரிவுகள் (47) மற்றும் (48) மற்றும் பிரிவு (49) ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

51. ஏதேனுமாண்டுக்காகப் பாராளுமன்றத்திடமிருந்து பேரவையினால் கோரப்பட்ட வரவுசெலவுக் குறித்தொதுக்குகை, அதன் மிக்க அண்மையில் அங்கீகரிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தில் தரப்பட்டுள்ளவாறு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட (காலத்துக்குக்காலம் மீளாய்வுசெய்யப்பட்டவாறான) அதன் வருடாந்தக் குறித்தொதுக்கலின்கீழ் குறைக்கப்படுதலாகாது.

52. ஏதேனுமாண்டில் பேரவையின் அவ்வாண்டுக்கான செலவினத்துக்குமேலாக அதன் அரசிறையின் ஏதேனும் விஞ்சுதொகை, அடுத்துவரும் ஆண்டுகளில் அதன் செலவினத்தை ஈடுசெய்வதற்கு முன்னெடுத்துச்செல்லப்படுதல் வேண்டும்.

53. பேரவையின் நிதியாண்டு கலண்டர் ஆண்டாதல் வேண்டுமென்பதுடன், பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும்:

அ. பேரவையின் வருமானமும் செலவினமும் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றி முறையான கணக்குகள் பேணப்படுவதனைப் பேரவையானது செய்வித்தல்வேண்டும்.

ஆ. பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், பேரவையின் கணக்குகளினது கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

இ. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள், பேரவையின் நிதிசார் கட்டுப்பாட்டுக்கும்

கணக்குகளுக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

54. பேரவையின் உறுப்பினர்களும் அலுவலர்களும் மற்றெல்லா ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் பேரவையினால் நடாத்தப்பட்ட ஒவ்வொரு விசாரணையும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்பட நீதிமுறை வழக்குநடவடிக்கையொன்றாகக் கருதப்படுதலும்வேண்டும்.

55. பேரவையானது, (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சம் பற்றிய சட்டத்தின் கருத்துக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

56. இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காகப் பேரவையின் எவரேனும் உறுப்பினரினால், அலுவலரினால் அல்லது ஊழியரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் அல்லது செய்யாமை தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின்முன்னர் அத்தகைய ஆளினால் அல்லது அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் அல்லது செய்யாமை நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, பேரவையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

## பேரவைச் செயற்பாடுகளை அறிக்கையிடுதல்

57. (அ) பேரவையானது, அவசியமென அது கருதக்கூடியவாறாக அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்று தயாரிக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்; ஆயின், எவ்வாறாயினும், ஒவ்வொரு கலண்டர் ஆண்டிலும் ஆகக்குறைந்தது ஓர் அறிக்கையையேனும் அது தயாரித்தல் வேண்டும். பாராளுமன்றத்தின்முன்னர் இடப்படுவதற்கு அத்தகைய ஒவ்வோர் அறிக்கையினதும் பிரதியைப் பேரவை அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன், அதன் பிரதியொன்று சனாதிபதிக்கும் அனுப்பப்படுதலும் வேண்டும்.

(ஆ) உட்பிரிவு (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கை, பேரவையின் செயற்பாடுகளை அறிக்கையிடுவதுடன், கேட்பதற்குப் பெறப்பட்ட, நிராகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை பற்றிய தகவல்களையும், சம்பந்தப்பட்ட திறத்தவர்கள்பற்றிய தகவல்களுடன் பேரவையினால் நடாத்தப்பட்ட ஒவ்வொரு விசாரணையிலும் விவரணங்கள்பற்றிய சுருக்கத்துடனான அட்டவணையையும், சார்த்துகையானது செயல்முறை ஒழுக்கக் கோவைகளை மீறுகின்றமைபற்றி இருக்குமிடத்து, செயல்முறை ஒழுக்கக் கோவைகளின் இயைபான அம்சங்களையும், அல்லது வேறு விடயங்களில் விசாரணையின் விடயப்பொருளையும், பேரவையின் முடிபையும், அத்தகைய முடிபுக்கான காரணங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

58. பிரிவு (57) இன்கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரதியொன்று, அது பாராளுமன்றத்தின்முன்னர் இடப்பட்டதிலிருந்து இரண்டு வாரங்களினுள், வேறுவழிகளில் முன்னோக்குடன் வெளியிடப்படுவதுடன், அதன் இணையத்தளத்தினூடாகப் பொதுமக்களின் பார்வைக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுதலும் வேண்டும்.

**குற்றங்கள்**

59. (அ)

i. ஒரு செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊடகவியலாளரொருவரினால் சட்டமுறையான செய்திகளும் தகவல்களும் சேகரிக்கப்படுவதில் அவருக்கு தடையேற்படுத்துகின்ற ஆளெவரும்;

ii. இச்சட்டத்தின் (9) ஆம் பிரிவுக்கு முரணாக அந்தரங்கத் தகவல் மூலத்தை வெளிக்காட்டும்படி எவரையும் தேவைப்படுத்துவதற்கு எத்தனிக்கின்ற ஆளெவரும்;

iii. ஒரு செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தின் பிரதம ஆசிரியர், ஊடகவியலாளர் அல்லது வேறெவரேனும் ஊழியர், சுயாதீன ஊடக தரநிர்ணயங்கள் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட செயல்முறை ஒழுக்கக் கோவைகளை அவர் மீறுவதற்கு மறுக்கின்றமை காரணமாக அவருக்கெதிராக ஓரங்காட்டுகின்ற, அல்லது அவர் மீது தடைகளை விதிக்கின்ற அல்லது அவரது தொழிலை முடிவுறுத்துகின்ற ஆளெவரும்,

இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்றுமாதகால சிறைத்தண்டனைக்கு அல்லது இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(ஆ)

iv. பேரவைக்குப் பிழையான, செம்மையற்ற தகவல்களை வேண்டுமென்று வழங்குகின்ற, பேரவையினால் தேவைப்படுத்தப்பட்டவையும் அவரது கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்பட்டவையும் அல்லது அவரது தொழிலைப் பிரயோகித்தல் காரணமாக அவர் அணுக்கத்தையுடையவையும் அல்லது அறிந்துள்ளவையுமான தகவல்களை அழித்துவிடுகின்ற, செல்லுபடியற்றனவாக்குகின்ற, மாற்றியமைக்கின்ற அல்லது முழுமையாக அல்லது பகுதியளவில் மறைத்துவைக்கின்ற ஆளெவரும்;

v. தேவைப்படுத்தப்படும்போது பேரவையின்முன்னர் தோன்றத் தவறுகின்ற ஆளெவரும்;

vi. பேரவையின் முன்னர் தோன்றி, பேரவையினால் விசாரணை செய்யப்படுவதற்கு அல்லது அந்த நபரின் உடமையில் அல்லது அதிகாரத்தில் உள்ள தகவல்களைக் காண்பிக்கத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது சத்தியம் அல்லது உறுதியுரையின்கீழ் பொய்யான தகவல்களை வழங்குகின்ற ஆளெவரும்;

vii. இச்சட்டத்தினால் பேரவைக்கு அல்லது பேரவையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது வேறு ஊழியருக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரத்தைப் பிரயோகிக்கையில், பேரவையை அல்லது அத்தகைய ஊழியரை எதிர்க்கின்ற அல்லது அதற்கு அல்லது அவருக்கு தடையிடுகின்ற ஆளெவரும்,

இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவரினாலான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்றுமாதகால சிறைத்தண்டனைக்கு அல்லது இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். பேரவையிடமிருந்து அப்பொருள்பட்ட அறிக்கையொன்றைப் பெற்றதன்மேல் நீதிவான் நீதிமன்றம் உட்பிரிவு (ஆ) இன்கீழான தவறொன்றை விசாரணைக்குட்படுத்துதல் வேண்டும்.

60. பேரவையின் முடிபொன்றுக்கு இணங்கியொழுகுவதற்கு அல்லது அதற்குப் பயன்கொடுப்பதற்கு மறுக்கின்ற ஏதேனும் செய்தி ஊடகப் பரப்புகை மூலம் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றதுடன், நீதிவான் நீதிமன்றத்திலான சுருக்கவிளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஒரு மில்லியன் ரூபா வரையிலான குற்றப்பணத்துக்கு உட்பட்டதாதலும் வேண்டும்; ஆயின், எவ்வாறாயினும், அக்குற்றப்பணமானது, செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தின் கணக்காய்வுசெய்யப்பட்ட வருமானக்கூற்றுக்களின் அடிப்படையில் அல்லது நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டமுறையில் கணக்கிடப்பட்ட அதன் ஒருவார வருமானத்தொகையாகவுள்ளவொரு பணத்தொகையை விஞ்சுதலாகாது.

61. (அ) இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்களுக்காக விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்களுக்காகப் பேரவை விதிகளையாக்கலாம்.

(ஆ) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் பாராளுமன்றத்தின்முன்னர் இடப்படுதல் வேண்டுமென்பதுடன், மூன்று மாதங்களை விஞ்சாத நியாயமானவொரு காலப்பகுதியினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

**பேரவையின் இலச்சினை**

62. பேரவையின் இலச்சினை:

அ. பேரவையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்பட்டவாறாதல் வேண்டும்;

ஆ. பேரவை தீர்மானிக்கவேண்டியவாறான அத்தகைய நபரின் கட்டுப்பாட்டிலிருத்தல் வேண்டும்;

இ. பேரவை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றியமைக்கப்படலாம்; அத்துடன்

ஈ. பேரவையின் வலுவளிப்புடன்தவிரவும்,பேரவையின் தவிசாளரினதும் அத்தகைய வேறோர் உறுப்பினரினதும் முன்னிலையிற்றவிரவும் ஏதேனும் ஆவணத்தில் அல்லது சாதனத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் இருவரும் தாம் சமுகமாயிருந்தனரென்பதற்கு அத்தாட்சியாக அத்தகைய ஆவணத்தில் அல்லது சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

63. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**வரைவிலக்கணங்கள்**

64. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய,

அ. ''செய்தி ஊடக வெளியீடு'' என்பது, நிர்ணயிக்கப்பட்டவொரு தலையங்கத்தைக் கொண்டதும், ஒரு மாதத்துக்கு ஆகக்குறைந்தது ஒரு தடவையேனும் கிரமமான தொடர்ச்சிகளாக வெளியிடப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டதும், எந்த வெளியீட்டாளரின் செயற்பாடுகள் இலங்கையில் நிறைவேற்றப்படுகின்றனவோெ அந்த வெளியீட்டாளரினால் வெளியிடப்பட்டதும், செய்திகளும் தகவல்களும் பற்றிய நம்பகமான மூலமாக அதன்மீது நம்பிக்கையுள்ள பொதுமக்களுக்கு அல்லது அவர்களுள் ஒருபகுதியினருக்குச் செய்திகளையும் தகவல்களையும் பரப்புவதனை இலக்காகக்கொண்டதுமான அச்சிடப்பட்ட வெளியீடு என்று பொருளாகும்.

ஆ. ''வெளியீட்டாளர்'' என்பது, செய்தி ஊடக வெளியீடு எவரின் கணக்கால் வெளியிடப்படுகின்றதோ அவர் என்று, அல்லது பொருத்தமான உரிமமளிக்கும் அதிகாரியினால் வழங்கப்பட்ட ஒலி-ஒளிபரப்பு உரிமத்தை வைத்திருப்பவர் என்று பொருளாகும்.

இ. ''ஒலி-ஒளிபரப்பு உள்ளீட்டுச் சேவை'' என்பது, பொருத்தமான உரிமமளிக்கும் அதிகாரியினால் வழங்கப்பட்ட உரிமத்தின்கீழ் தாபிக்கப்பட்ட, ஓர் ஒப்பப்பணத்தின் மூலமாகவாயினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி, ஒரு வானொலி அத்துடன்/அல்லது ஒரு தொலைக்காட்சிப் பெறுகருவி அல்லது வேறேதேனும் தொடர்புபட்ட இலத்திரனியற் சாதனத்தினூடாக, பொதுமக்களின் நுகர்வுக்காகவும் ஒத்த பெறுகைக்காகவும் புவிசார் அனுப்புகைகளினூடாக, செய்மதியினூடாக, அல்லது வடத்தினூடாக அனுப்பப்பட்ட ஒலி அத்துடன்/அல்லது காட்சி நிகழ்ச்சிகள் என்று பொருளாகும், ஆனால் ஒரு தனியார் அல்லது அரசாங்கக் குழுவுக்கான உள்ளகத் தொடர்பாடல்களை, அல்லது இணையத்தின்மூலம் பரப்பப்பட்ட தொடர்பாடல்களை உள்ளடக்காது.

ஈ. ''தொடரிணைச் செய்தி ஊடகச்சேவை'' என்பது, இணையத்தினூடாகப் பொதுமக்களுக்குப் பகிரப்பட்ட செய்தி மற்றும் தகவற் சேவைகள் என்று பொருளாகும்; ஆயின், அத்தகைய தொடரிணைச் செய்தி ஊடகச் சேவைகள், ஒரு செய்தி ஊடக வெளியீடாக அல்லது ஒலி-ஒளிபரப்பு உள்ளீட்டுச் சேவையாகக் கருதப்படமுடியுமானவையாதல் வேண்டும்.

உ. ''செய்திகளும் தகவல்களும்'' என்பது, செய்தி ஊடகத்தின் வாசிப்போரினாலும், பார்வையாளர்களினாலும், கேட்போரினாலும் நுகரப்பட்டவையும் தகவல்களினதும் கருத்துக்களினதும்

நம்பகமான மூலமாக ஊடகப் பயன்படுத்துநரினால் நம்பப்படுகின்றவையுமான உரைகள், நடமாடும் அல்லது நிலையான காட்சிகள் மற்றும் ஒலிப்பொருட்கள் என்று பொருளாகும்.

ஊ. "பிரதம ஆசிரியர்" என்பது, (12) ஆம் பிரிவுக்கமைய, ஒரு செய்தி ஊடகப் பரப்புகை மூலகத்தின் உள்ளீட்டின்மீது இறுதிப் பதிப்புச்சார் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற ஆள் என்று பொருளாகும்.

எ. "உரிமையாளர்" என்பது, ஒரு செய்தி ஊடகப் பரப்புகை மூலத்தைச் சொந்தமாக வைத்திருக்கின்ற அல்லது அதில் ஆகக்குறைந்தது 5% உரிமைசார் அக்கறையையேனும் கொண்டுள்ள எவரேனுமாள் என்று பொருளாகும்.

ஏ. "அச்சிடுபவர்" என்பது, செய்தி ஊடக வெளியீடொன்றை அச்சிடும் நோக்கத்துக்காக ஒரு வெளியீட்டாளரினால் நியமிக்கப்பட்ட அல்லது ஒரு வெளியீட்டாளருடன் ஒப்பந்தஞ்செய்துகொண்டுள்ள எவரேனுமாள் என்று பொருளாகும்.

ஐ. "ஆள்" என்பது, ஓர் இயற்கையான அல்லது சட்ட ஆள் என்று பொருளாகும்.

ஒ. "பகிர்பவர்" என்பது, வெகுசன ஊடக வெளியீடுகளின் மொத்தவிற்பனைப் பகிர்வில் ஈடுபடுவதற்கு வெளியீட்டாளருடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்கின்ற எவரேனுமாள் என்று பொருளாகும்.

## அட்டவணை I

உட்பிரிவு 39 (i)

## பேரவை உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடு

1. பேரவையின் உறுப்பினரொருவர், பின்வரும் சந்தர்ப்பங்களில் அத்தகைய உறுப்பினராக இல்லாதொழிதல் வேண்டும்:

   அ. சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அவரது பதவியிலிருந்து முன்னரே விலகுமிடத்து;
   
   ஆ. இவ்வட்டணையின் 2 ஆம் பிரிவுக்கிணங்கச் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து;
   
   இ. ஒரு போக்குவரத்துத் தவறு அல்லாத தவறொன்றுக்குத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து;
   
   ஈ. பேரவையின் முன்னனுமதியைப் பெறாமல், பேரவையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு அவர் வருகைதராமையின்மூலம் பதவியை வறிதாக்கியுள்ளவராகக் கருதப்படுமிடத்து.

2. அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியானவர், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரினதும் மூன்றிலிரெண்டு பங்கினரினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டவொரு தீர்மானத்தைப் பின்பற்றி, அரசியலமைப்புப் பேரவையினாலும் பாராளுமன்றத்தினாலும் கேட்கப்படுவதற்கு நியாயமானவொரு சந்தர்ப்பத்தை உறுப்பினரொருவருக்கு அளித்தபின்னர், பின்வரும் சந்தர்ப்பங்களில் பேரவை உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்:

   அ. சித்தசுவாதீனமின்மைகாரணமாக அத்தகைய உறுப்பினர் அவரது கடமைகளைப் புரிவதற்கு நிரந்தரமாக இயலாதவராக வந்துள்ளவிடத்து; அல்லது
   
   ஆ. ஒழுக்கக்கேட்டு அடிப்படையின்மீது அத்தகைய உறுப்பினர் அவரது கடமைகளைப் புரிவதற்குத் தகுதியற்றவராகவிருக்குமிடத்து.

3. பேரவையின் தவிசாளர் அல்லது வேறெவரேனும் உறுப்பினர், அதற்கெனச் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அத்தகைய பதவியிலிருந்து விலகலாமென்பதுடன், அவ்விலகுகையானது சனாதிபதியினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து பயனுறுவதாக வருதலும் வேண்டும்.

4. எவரேனும் பேரவை உறுப்பினரின் பதவிக்காலத்தில் ஆறுமாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் எஞ்சியுள்ளவிடத்து அவர் பதவியை வறிதாக்கும் பட்சத்தில், (30) ஆம் பிரிவில் தரப்பட்டுள்ளவாறான அதே நடவடிக்கைமுறையைப் பின்பற்றுகின்ற இயைபான பெயர்நியமிக்கும் உருவகங்களின் வகுதியிலிருந்து அரசியலமைப்புப் பேரவையினாலான புதிய விதப்புரைகளின் அடிப்படையில், சனாதிபதி வேறோராளை நியமித்தல் வேண்டும்; அவர் எவ்வுறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்துக்கு அத்தகைய பதவியை வகித்தல்வேண்டும்.

5. பேரவை உறுப்பினரொருவர், சுகவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணத்துக்காக அவரது கடமையை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, சனாதிபதி, பேரவையின் விதப்புரையின்மீதும் அரசியலமைப்புப் பேரவையின் ஒருப்பாட்டுடனும், அத்தகைய உறுப்பினர் வருகைதராதபோது அவரின் இடத்தில் செயலாற்றுவதற்கு வேறோராளை நியமிக்கலாம்.

6. பேரவை உறுப்பினர்களுக்கு, பேரவை உறுப்பினர்களென்றமுறையில் அவர்களினது கடமைகளின் விளைவாக உறப்பட்ட பயணம், இடவசதி மற்றும் உணவு உட்பட்ட உள்ளபடியான செலவுகளுக்காக செலவுக்கான ஈடளிக்கப்படுதல் வேண்டும்.

7. பேரவையினால் முற்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட அல்லது தவிசாளரினால் கூட்டப்பட்ட பேரவைக் கூட்டங்களுக்கு வருகைதருவதற்குப் பேரவை உறுப்பினர்கள் சமமான அடிப்படையில் செலவுக்கான ஈடு பெறுதல் வேண்டும்.

8. ஏதேனும் வெற்றிடம் அல்லது உறுப்பினர்களின் பதவிவிலகுகை காரணமாகப் பேரவையின் நடவடிக்கைகள் செல்லுபடியற்றனவல்ல; ஆயின், பேரவைக் கூட்டங்கள் அவசியமான கூட்டநடப்பெண்ணுடன் நடாத்தப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

உட்பிரிவு 37(ஆ)(xiv)

### பகிரங்கக் கலந்தாலோசனைகள் தொடர்பான ஏற்பாடுகள்

1. பேரவையானது பகிரங்கக் கலந்தாலோசனையொன்றை நடாத்தினால், பின்வருவனபற்றிய அறிவித்தலை அது வெளியிடுதல் வேண்டும்:

   அ. அது பகிரங்கக் கலந்தாலோசனையை நடாத்துகின்றது என்ற நிகழ்வு;
   ஆ. பகிரங்கக் கலந்தாலோசனை எந்தக் காலப்பகுதியின்போது நடாத்தப்படவுள்ளதோ அந்தக் காலப்பகுதி;
   இ. பகிரங்கக் கலந்தாலோசனை எக்கருமம் தொடர்பானதோ அக்கருமத்தின் தன்மை;
   ஈ. எக்காலப்பகுதியினுள்ளும், எப்படிவத்திலும் ஆட்கள் அக்கருமம் பற்றிப் பேரவைக்குச் சமர்ப்பணங்களைச் செய்யலாமோ அக்காலப்பகுதியும், அப்படிவமும்; அத்துடன்
   உ. சமர்ப்பணங்கள் அனுப்பப்படக்கூடிய முகவரி.

2. பகிரங்கக் கலந்தாலோசனையொன்றை நடாத்துவதில், பேரவையானது பின்வருவனபற்றிய கலந்துரையாடற் பத்திரமொன்றை வெளியிடலாம்:

   அ. பேரவையின் அபிப்பிராயத்தில் அக்கருமத்துக்கு இயைபானவையாகவுள்ள பிரச்சினைகளை இனங்காண்பது;
   ஆ. பேரவை பொருத்தமானவையெனக் கருதுகின்றவாறான அப்பிரச்சினைகள் பற்றிய அத்தகைய பின்னணி விடயங்களைத் தடுக்கின்றது, மற்றும் அப்பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவது.

3. நிறைவேற்றப்பட்ட ஏதேனும் பகிரங்கக் கலந்தாலோசனைபற்றிய பெறுபேறுகளைப் பேரவையானது அக்கலந்தாலோசனை பூர்த்திசெய்யப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் வெளியிடுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் அதன் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றும்போது மற்றும் அதிகாரங்களைப் பிரயோகிக்கும்போது அத்தகைய கலந்தாலோசனையின் பெறுபேறுகளைக் கவனத்துட்கொள்ளுதலும், தகுதியானதென அது கருதும் அளவுக்கு அவற்றைக் கணக்குக்கெடுத்தலும் வேண்டும்.

4. இப்பிரிவின் நோக்கங்களுக்காக, வெளியிடப்படவேண்டிய அறிவித்தல்களும், ஆவணங்களும் அல்லது தகவல்களும் பேரவையின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டு அதன் அலுவலகங்களில் கிடைக்கக்கூடியனவாக்கப்படுதல் வேண்டும். பேரவையானது, மேலதிகமாக, அக்கறைகொண்டுள்ள எல்லாத் திறத்தவர்களினதும் கவனத்துக்கு அவற்றைக் கொண்டு வருவதற்குத் பொருத்தமானதெனப் பேரவை கருதக்கூடியவாறான அத்தகைய வேறு முறையில் அத்தகைய அறிவித்தல்களை, ஆவணங்களை அல்லது தகவல்களை வெளியிடலாம்.

2017/1-2

செய்தி ஊடக தரநிர்ணயங்களுக்கான சுயாதீனப் பேரவை

முதலாவது கலந்துரையாடல் வரைவு - மூலப்பிரதி ஆங்கிலத்திலுள்ளது

முதல் பதிப்பு - 2017 மே

விஜயானந்த ஜயவீர

பதிப்பகம்

பொதுஜன ஊடக மறுசீரமைப்பு செயலகம்

இல. 58/19, பாடசாலை வீதி, நாவல, ராஜகிரிய.

இணையம் : *http://www.nsmrlk.org*

மின் அஞ்சல் : *secretariat@nsmrlk.org*